## இணையம் சார்ந்த ‘கிக்’ தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யலாம்




**சென்னை:** இணையம் சார்ந்த 'கிக்' தொழிலில் பணியாற்றும் தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்து பயன்பெறலாம் என தொழிலாளர் நலத்துறை அறிவித்துள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரிய செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பலவித மாற்றங்களில் இணையவழி விற்பனை, வர்த்தக சேவை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையான பணியமைப்பில் மரபான முறையில் அல்லாமல், இணையதள நிறுவனங்கள், தொழிலாளர்களிடையே உடன்படிக்கை அடிப்படையில் வேலை வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ‘ஸ்விகி, சோமாட்டோ, டன்சோ போன்ற இணையதளம் சார்ந்த நிறுவனங்களில் வேலை செய்யும் கிக் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கும் வகையில் தனி நலவாரியம் அமைக்கப்படும்’ என சுதந்திர தின உரையில் அறிவித்தார். அதன்படி தனி நல வாரியம் உருவாக்குவதற்காக இணையம் சார்ந்த கிக் (Gig) தொழில்களை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள்

முறைப்படுத்துதல்) சட்ட அட்டவணையில் சேர்த்துஅரசு அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேலும், தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நலவாரியம் அமைத்தும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாரியத்துக்கான திட்டக் கூறுகள் இயற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இணையதளம் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் கிக் தொழிலாளர்கள் தற்போது தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு, நலவாரியத்தில் பதிவு பெற்று பயனடைய வகை செய்யப்பட்டுஉள்ளது. இவ்வாரியத்தில் 18 வயதுமுதல் 60 வயது வரையிலான தொழிலாளர்கள், பணிபுரியும் நிறுவனம் அல்லது தொழிற்சங்கங்களிடமிருந்து பணிச் சான்று பெற்று www.tnuwwb.tn.gov.in என்ற இணையதளத்தில் GIGW எனும் குறியீட்டின்கீழ் தங்களை பதிவு செய்து கொள்ளலாம். பதிவு பெற்றதொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, ஓய்வூதியம் ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருவள்ளூர் மாவட்ட விவசாயியுடன் காணொலி காட்சி மூலம் கலந்துரையாடிய பிரதமர்

EVA



ஹரிகிருஷ்ணன்

**திருவள்ளூர்:** 'நமது லட்சியம் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற விழிப்புணர்வு நிகழ்வில், திருவள்ளூர் மாவட்ட விவசாயியுடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் கலந்துரையாடினார். மத்திய அரசின் பல்வேறு திட்டங்களில் பயனடைந்தவர்களில், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தராகண்ட், குஜராத், தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் இருந்து 6 பேரை மத்திய அரசு, 'நமது லட்சியம் வளர்ச்சி அடைந்த பாரதம்' என்ற விழிப்புணர்வு நிகழ்வில் பிரதமருடன் காணொலி காட்சி மூலம் கலந்துரையாட ஏற்கெனவே தேர்வு செய்தது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர் களில் ஒருவர் திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெங்கல்குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவிவசாயி ஹரிகிருஷ்ணன் (43).

இதையடுத்து, திரூர் வேளாண் அறிவியல் நிலையம் மூலம், பெருமாள்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் நேற்று முன் தினம் 'நமது லட்சியம் வளர்ச்சி அடைந்த பாரதம்' என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில், காணொலி காட்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி, விவசாயி ஹரிகிருஷ்ணனிடம் கலந்துரையாடினார். அப்போது பிரதமர், ஹரிகிருஷ்ணனிடம் 'நீங்கள் மத்திய அரசின் எந்தெந்த திட்டங்களில் பயனடைந்துள்ளீர்கள்? எப்படி விவசாயத்துக்கு வந்தீர்கள்? போன்ற விவரங்களை கேட்டார்.

அதற்கு பதிலளித்து பேசிய ஹரிகிருஷ்ணன், “விவசாய குடும்பத்தைச் சேர்ந்த நான் பிஎஸ்சி (கணினி பொறியியல் ) படித்து, தனியார் வங்கி ஊழியராக 2 ஆண்டுகள் பணிபுரிந்தேன். இந்நிலையில், கடந்த 2000 -ல்எனது தந்தை மறைந்ததையடுத்து, முழு நேரமாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறேன். மத்திய அரசு திட்டங்களான பி.எம் கிசான் திட்டம், பிரதமர் மருத்துவ காப்பீட்டு திட்டம், பி.எம் கிசான் கிரெடிட் கார்டு திட்டம், பிரதமர் குடியிருப்பு திட்டங்களில் பயனடைந்துள்ளேன்.

அதோடு, நீர் மூலம் கரையும் உரங்களை பயிர்களுக்கு டிரோன் மூலம்தெளிக்கவும் பயிற்சி பெற்று வருகிறேன். நவீன முறையில் பயிர் சாகுபடி உற்பத்தி செய்யும் வகையில் வேளாண், தோட்டக்கலைத் துறை, வேளாண் அறிவியல் நிலையம் மூலம்பயிற்சியும் பெற்றுள்ளேன்’’ என்றார். அதற்கு பிரதமர், ‘’நமது நாட்டின்முதுகெலும்பாக விவசாயிகள் உள்ளீர்கள். மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து உங்களை போன்றுமக்கள் அனைவரும் அறிந்து கொண்டுபயன்பெற வேண்டும்’’ என்றார்.

இந்த நிகழ்வில், தமிழ்நாடுவேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் பி.பொ.முருகன், திரூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பானுமதி பங்கேற்றனர். பிரதமர் தன்னிடம் உரையாடியது குறித்து ஹரிகிருஷ்ணன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

EVA S